News Release

வாகன் சுவை விழாவுக்கான (Vaughan Flavours) இந்தக் கோடை பதிப்பிற்காக உங்கள் மேஜையை முன்பதிவு செய்யுங்கள்!

ஜூலை 24 முதல் ஆகஸ்ட் 7 வரை, வாகனில் உள்ள 20 உள்ளூர் உணவகங்களில், ருசிகரமான மூன்று-வகை உணவுகளைக் அனுபவிக்கத் தயார் ஆகுங்கள்!

வாகன், ஒன்ராறியோ (ஜூன் 24, 2025) – உங்கள் கோடை காலம் இப்போது இன்னும் சுவையாகிறது! உலகத்தின் பல்வேறு சுவைகளை ருசிக்கவும், உள்ளூர் உணவகங்களை ஆதரிக்கவும், ஜூலை 24 வெள்ளிக்கிழமை முதல் ஆகஸ்ட் 7 வெள்ளிக்கிழமை வரை நடைபெறும் வாகன் சுவை விழாவுக்கான கோடை காலப் பதிப்பில் இணைந்து கொள்ளுங்கள்.

பின்வரும் உணவகங்களில் மதிய உணவிற்கு $20 முதல் $55 வரையிலும், இரவு உணவிற்கு $25 முதல் $75 வரையிலும் மூன்று-வகை ப்ரீக்ஸ் ஃபிக்ஸ் (three-course prix fixe) மெனுக்களை அனுபவிக்க இன்றே உங்கள் மேஜையை முன்பதிவு செய்யுங்கள்:

- 9baci – 10200 கீலே ஸ்ட்ரீட் (Keele St.)
- ஐய்லா டர்கிஷ் குய்ஸின் – 10385 வெஸ்டன் ரோடு, யூனிட் 7B (Aiyla Turkish Cuisine – 10385 Weston Rd., Unit 7B)
- அண்ணா அண்ட் லுசியோ டிரட்டோரியா – 9401 ஜேன் ஸ்ட்ரீட், யூனிட் 119 (Anna and Lucio's Trattoria – 9401 Jane St., Unit 119)
- காஸ்டெல்லோ ரிஸ்டோரன்டே – 3600 லாங்ஸ்டாஃப் ரோடு, யூனிட் 12 (Castello Ristorante – 3600 Langstaff Rd., Unit 12)
- காய் காக்-மாங்-ரெ – 4300 ஸ்டீல்ஸ் அவென்யூ வெஸ்ட், யூனிட் 29 (Cai Gac-Mang-Re – 4300 Steeles Ave. W., Unit 29)
- சிக் பிக் கேட்டரிங் அண்ட் ரெஸ்டாரண்ட் – 160 சைடர்மில் அவென்யூ, யூனிட் 6 (Chick Pick Catering and Restaurant – 160 Cidermill Ave., Unit 6)
- கிரேயோல் ஜமைக்கான் கிட்சன் அண்ட் பார் – 7887 வெஸ்டன் ரோடு, யூனிட் 7 (Creole Jamaican Kitchen and Bar – 7887 Weston Rd., Unit 7)
- ட்ரஞ்ச் கிச்சன் அண்ட் வைன் – 9200 பாதர்ஸ்ட் ஸ்ட்ரீட், யூனிட் D6 (Drunch Kitchen and Wine – 9200 Bathurst St., Unit D6)
- எடோ ஜப்பான் – 3737 மேஜர் மெக்கன்சி டிரைவ், யூனிட் 103 (EDO Japan – 3737 Major Mackenzie Dr., Unit 103)

- ஃபாவோலோசோ ரிஸ்டோரன்டே – 9200 வெஸ்டன் ரோடு, யூனிட் 21 (Favoloso Ristorante – 9200 Weston Rd., Unit 21)
- கிரான் குஸ்டோ ரிஸ்டோரன்டே இ பிட்சரியா – 3883 நெடுஞ்சாலை 7, யூனிட் 6 (Gran Gusto Ristorante e Pizzeria – 3883 Highway 7, Unit 6)
- க்ரேவ் இந்தியன் – 6150 நெடுஞ்சாலை 7, யூனிட் 4 (Krave Indian – 6150 Hwy 7, Unit 4)
- லே வெச்சியா – 8700 பாதர்ஸ்ட் ஸ்ட்ரீட் (La Vecchia – 8700 Bathurst St.)
- லுமினா பிஸ்ட்ரோ – 10 ஸ்ட்ராடா டிரைவ், யூனிட் 7 (Lumina Bistro – 10 Strada Dr., Unit 7)
- மாஸ்ட்ரோ ரோபர்டோ ட்ரட்டோரியா அண்ட் பிட்சரியா – 7887 வெஸ்டன் ரோடு, யூனிட் 8 (Mastro Roberto Trattoria and Pizzeria – 7887 Weston Rd., Unit 8)
- ஃபொ பிலாஸ்ஸாம் இட்டேரி 3737 மேஜர் மெக்கன்சி டிரைவ், யூனிட் 108 (Pho Blossom Eatery – 3737 Major Mackenzie Dr., Unit 108)
- ஸ்டேட் அண்ட் மெயின் – 3584 மேஜர் மெக்கன்சி டிரைவ் (State and Main – 3584 Major Mackenzie Dr.)
- தாட்'ஸ் இட்டாலியன் ரிஸ்டோரன்டே – 2 டால் கிராஸ் ட்ரெயில், யூனிட் 4 (That's Italian Ristorante – 2 Tall Grass Trail, Unit 4)
- தி வாகன் சிட்டி கிரில் – 211 மேரிகிராஃப்ட் அவென்யூ, யூனிட் 4 (The Vaughan City Grill – 211 Marycroft Ave., Unit 4)
- ட்ரியோ ரெஸ்டாரண்ட் அண்ட் பார் – 200 பாஸ் ப்ரோ மில்ஸ் டிரைவ் (Trio Restaurant and Bar – 200 Bass Pro Mills Dr.)

எந்த வகைச் சுவையை விரும்பினாலும், வாகன் சுவை விழா – கோடை காலப் பதிப்பில் உங்களுக்கான அனுபவம் நிச்சயம் உள்ளது – இந்தச் சிறப்பு நிகழ்வைத் தவறவிடாமல் கலந்துகொள்ள முன்கூட்டியே திட்டமிடுங்கள்!

வாகன் சுவை விழா என்பது, அமெரிக்காவில் விதிக்கப்பட்ட பரந்த அளவிலான வரிகளை எதிர்கொள்வதற்கான நடவடிக்கையாக, உள்ளூர் வணிகங்களை ஆதரிக்க உருவாக்கப்பட்ட வாகன் நகரத்தின் முன்முயற்சி ஆகும். இது மேயர் ஸ்டீவன் டெல் டுகாவும், வார்டு 2 கவுன்சிலர் அட்ரியானோ வோல்பெண்டெஸ்டாவும் முன்வைத்த உறுப்பினர் தீர்மானத்தின் (PDF) அடிப்படையில் உருவானது. அந்தத் தீர்மானம், வாகனில் வசிப்பவர்களும் பார்வையாளர்களும் உள்ளூர் உணவகங்களில் உணவருந்த ஊக்குவிக்கும் ஒரு முன்முயற்சி திட்டமாக உருவாக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் 23, 2025 அன்று, வாகன் கவுன்சில், வாகன் சுவை விழாவுக்கான முன்முயற்சி திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஊழியர் அறிக்கையை (PDF) அங்கீகரித்தது. 2026 ஜூன் 23 அன்று, வாகன் கவுன்சில், இத்திட்டத்தை ஆண்டுதோறும்

கோடைக்கால மற்றும் குளிர்காலப் பதிப்புகளாகச் செயல்படுத்துவதற்கான ஊழியர் அறிக்கைக்கு (PDF) ஒப்புதல் வழங்கியது.

மெனுக்களைப் பார்வையிடவும், மேஜையை முன்பதிவு செய்யவும், பின்வரும் வலைத்தளத்திற்குச் செல்லவும்:
visitvaughan.ca/**VaughanFlavours**

மேற்கோள்கள்
"உங்கள் கோடைக்காலத்தை மறக்கமுடியாததாக மட்டுமல்லாமல், சுவைமிக்கதாகவும் மாற்றப்போகும் ஒரு சிறப்பான நிகழ்வைப் பகிர்ந்து கொள்வதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ஜூலை 24, வெள்ளிக்கிழமை முதல் ஆகஸ்ட் 7, வெள்ளிக்கிழமை வரை, வாகன் சுவை விழா நிகழ்ச்சியின் மூலம் எங்கள் உள்ளூர் உணவக உலகம் வழங்கும் சிறந்த சுவை அனுபவங்களைச் சுவைத்து மகிழுங்கள். உங்கள் குடும்பத்தினரையும் நண்பர்களையும் அழைத்துச் சென்று, இந்த நிகழ்ச்சியில் பங்கேற்கும் புதிய உணவகத்தை முயற்சிக்கலாம் அல்லது உங்களுக்கு ஏற்கனவே பிடித்த பழைய உணவகத்திற்கு மீண்டும் செல்லலாம். இத்தாலிய மற்றும் இந்திய உணவு வகைகளிலிருந்து ஜப்பானிய மற்றும் ஜமைக்கா உணவு வகைகள் வரை, அனைவரின் விருப்பத்திற்கும் ஏற்ற ஏதாவது ஒன்று நிச்சயமாக உள்ளது. இந்த முக்கிய முயற்சிக்கு தொடர்ந்து ஆதரவு வழங்கி வரும் வார்டு 2 கவுன்சிலர் அட்ரியானோ வோல்பென்டெஸ்டாவுக்கு மீண்டும் ஒருமுறை நன்றி தெரிவிக்கிறேன். இந்தச் சிறப்புமிக்க முயற்சியை மீண்டும் முன்னெடுத்து வருவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இடங்கள் நிரம்புவதற்கு முன்பே உங்கள் மேசையை முன்பதிவு செய்து கொள்ளுங்கள் – இப்போதே உங்கள் முன்பதிவைச் செய்து, உள்ளூர் வணிகங்களுக்கு ஆதரவு அளித்து, குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே கிடைக்கும் இந்தச் சுவைமிகு உணவு அனுபவத்தை மகிழ்ந்து அனுபவியுங்கள்!"

- மேயர் ஸ்டீவன் டெல் டுகா

"வாகன் சுவை விழா நிகழ்வை அனைவரும் அனுபவிப்பதற்காக நான் ஆவலுடன் காத்திருக்கிறேன்! இது வெறும் உணவக நிகழ்ச்சி மட்டுமல்ல – நமது நகரத்தின் கலாச்சாரம், சமூக ஒற்றுமை மற்றும் சமையல் கலைப் படைப்பாற்றலைக் கொண்டாடும் ஒரு சிறப்பு விழாவாகும். பங்கேற்கும் ஒவ்வொரு உணவகமும், தங்களுக்கே உரிய தனித்துவமான சுவைகளையும் சிறந்த உணவின் மீதான ஆர்வத்தையும் வெளிப்படுத்தும் வகையில் கவனமாக வடிவமைக்கப்பட்ட உணவுப் பட்டியல்களுடன் உங்களை வரவேற்கத் தயாராக உள்ளன. இந்தச் சிறப்புமிக்க நிகழ்ச்சி முழுவதும் தொடர்ந்து தலைமைத்துவம் வழங்கி வரும் மேயர் ஸ்டீவன் டெல் டுகா அவர்களுக்கு எனது நன்றிகள். நீங்கள்

அனைவரும் ஒரு மேசையையோ, அதற்கும் மேலாகவோ முன்பதிவு செய்து, மீண்டும் ஒருமுறை வாகனின் அற்புதமான உணவு அனுபவ நிகழ்ச்சியை ரசிப்பீர்கள் என்று நம்புகிறேன்!"

- வார்டு 2 கவுன்சிலர் அட்ரியானோ வோல்பெண்டெஸ்டா

முக்கியத் தகவல்கள்

- வாகன் நகரின் வாகன் சுவை விழாவுக்கான கோடை காலப் பதிப்பு ஜூலை 23 வெள்ளிக்கிழமை முதல் ஆகஸ்ட் 7 வெள்ளிக்கிழமை வரை நடைபெற உள்ளது.
- இந்த நிகழ்ச்சியில் பங்கேற்கும் இருபது உணவகங்கள், மூன்று-கோர்ஸ் ப்ரீக்ஸ் ஃபிக்ஸ் மெனுவுடன் உட்கார்ந்து உணவருந்தும் அனுபவத்தை வழங்குகின்றன.
- முன்பதிவைச் செய்ய, visitvaughan.ca/**VaughanFlavours** -ஐ பார்வையிடவும் அல்லது நேரடியாக அந்த உணவகத்தின் வலைத்தளத்தை அணுகவும்.
- வாகன் சுவை விழா நிகழ்ச்சி முதன்முறையாக 2025 ஆம் ஆண்டின் கோடைக்காலத்தில் நகரத்தால் நடத்தப்பட்டது.
- வாகன் சுவை விழா என்பது, அமெரிக்காவில் விதிக்கப்பட்ட பரந்த அளவிலான வரிகளை எதிர்கொள்வதற்கான நடவடிக்கையாக, உள்ளூர் வணிகங்களை ஆதரிக்க உருவாக்கப்பட்ட நகரத்தின் முன்முயற்சி ஆகும். இது மேயர் ஸ்டீவன் டெல் டுகாவும், வார்டு 2 கவுன்சிலர் அட்ரியானோ வோல்பெண்டெஸ்டாவும் முன்வைத்த உறுப்பினர்கள் தீர்மானத்தின் அடிப்படையில் உருவானது. அந்தத் தீர்மானம், வாகனில் வசிப்பவர்களும் பார்வையாளர்களும் உள்ளூர் உணவகங்களில் உணவருந்த ஊக்குவிக்கும் ஒரு முயற்சி திட்டத்தை உருவாக்க நகர ஊழியர்களை வழிநடத்துகிறது.
- 2025 மார்ச் மாத தொடக்கத்தில், அமெரிக்கச் சப்ளையர்களைத் தடை செய்யும் கொள்கையை அங்கீகரித்த ஒன்டாறியோ மாகாணத்தின் முதல் நகராட்சியாக வாகன் திகழ்ந்தது. 2025 ஏப்ரல் மாதத்தில், வாகன் நகரம், வணிகங்களுக்கு 'வாகன் உறுதியானது – கனடியர்களை ஆதரிக்கவும்' எனும் இலவச வரவேற்புத் தொகுப்புகளை வழங்கத் தொடங்கியது. இவை, கடைகளில் உள்ள உள்ளூர் மற்றும் கனடாவில் தயாரிக்கப்பட்ட பொருட்களை அடையாளம் காண உதவும் பொருட்களைக் கொண்டுள்ளன. இது கட்டணம் செலுத்தும் கவுண்டரில் வாடிக்கையாளர்கள் சந்திக்கும் குழப்பத்தை நீக்குகிறது. உங்கள் வணிகத்திற்கான வரவேற்புத் தொகுப்பைக் கோர, ed@vaughan.ca என்ற முகவரியில் பொருளாதார மேம்பாட்டுக் குழுவைத் தொடர்பு கொள்ளவும்.

மேலும் அறிய

- visitvaughan.ca/**VaughanFlavours**

- மேயர் ஸ்டீவன் டெல் டுகா மற்றும் வார்டு 2 கவுன்சிலர் அட்ரியானோ வோல்பெண்டெஸ்டா ஆகியோரின் மார்ச் 18 தேதியிட்ட உறுப்பினர்கள் தீர்மானம்: வாகன் உணவகத் திருவிழா (PDF)
- ஏப்ரல் 8, 2026, ஊழியர் அறிக்கை: வாகன் உணவகத் திருவிழா – கோடை 2025 | குளிர்காலம் 2026 (PDF)
- ஜூன் 16, 2026, ஊழியர் அறிக்கை: வாகன் உணவகத் திருவிழா: 2026 வாகன் சுவை விழா நிகழ்ச்சியின் சமீபத்திய தகவல்கள்
- வாகன் சுற்றுலா வலைத்தளம்
- வாகன் சுற்றுலா மின்-செய்திமடல்
- பொருளாதார மேம்பாட்டுத் துறை மின்-செய்திமடல்
- பொருளாதார மேம்பாடு LinkedIn

-30-

வாகனைப் பற்றி: வாகன் நகரம் கனடாவின் மிகவும் வேகமாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றாகும், இதன் மக்கள் தொகை 344,412 ஆக உள்ளது. 1991-இல் இணைக்கப்பட்ட வாகன், கான்கார்ட், க்ளீன்பர்க், மேப்பிள், தோர்ன்ஹில் மற்றும் வுட்பிரிட்ஜ் சமூகங்களை உள்ளடக்கியது. இந்தக் கலாச்சார ரீதியாகப் பன்முகத்தன்மை கொண்ட நகராட்சி, யார்க் பிராந்தியம் மற்றும் கிரேட்டர் டொராண்டோ பகுதியின் மையத்தில் அமைந்துள்ளது.

ஊடக தொடர்புக்கு: வாகன் நகரம்
தொடர்புகள், சந்தைப்படுத்தல் மற்றும் ஈடுபாட்டுத் துறை
905-832-2281 | corpcomm@vaughan.ca